

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 4(13).]

பாராளுமன்றத்தின்
4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2026 நவம்பர் 21, சனிக்கிழமை வெளியிடப்பட்டது

2026 டிசெம்பர் 22, செவ்வாய்க்கிழமை
வாய்மூல விடைக்கான வினாக்கள்

2208/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நீதித்துறை உத்தியோகத்தர்களின் மற்றும் ஏனைய உத்தியோகத்தர் களின் வெற்றிடங்களின் எண்ணிக்கை, நிறுவன வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2284/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற விசேட தேவைகளுடைய (மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட) கிரிக்கெட் குழுக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குழுக்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு குழுவும் இன்றளவில் சர்வதேச தரப்படுத்தல்களில் காணப்படுகின்ற இடம் மற்றும் சர்வதேச போட்டிகளில் ஈட்டியுள்ள அதி உயர் வெற்றிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கிரிக்கெட் குழுக்கள் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அல்லது அமைச்சில் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அமைச்சு அல்லது இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் அக் கிரிக்கெட் குழுக்களை ஊக்குவிப்பதற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதியின் அளவு யாதென்பதையும்;

(iii) சர்வதேசப் போட்டிகளில் வெற்றியீட்டுகின்ற விசேட தேவையுடைய கிரிக்கெட் வீரர்களுக்கும் தேசிய கிரிக்கெட் குழுவின் விளையாட்டு வீரர்களைப் போல் கொடுப்பனவுகள், பாராட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் காப்புறுதிகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இலங்கை முழுவதிலும் வாழ்கின்ற விசேட தேவையுடைய திறமைமிக்க விளையாட்டு வீரர்களை இனங்கண்டு குறித்த விளையாட்டு வீரர்களை இத்துறைக்கு ஆற்றுப்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் விசேட வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2471/2026

கௌரவ ஆர்.எம்.ரஞ்சித் மத்தும பண்டார,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) போதைப்பொருள் குற்றச்சாட்டுகளின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள், தண்டனை அனுபவிக்கும் கைதிகள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகள் ஆகியோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கைதிகளின் உணவு, பானங்கள் மற்றும் ஏனைய வசதிகளுக்ககாக நாளொன்றுக்குச் செலவாகின்ற பணத்தொகை யாதென்பதையும்;

(iii) சிறிய குற்றங்களுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்குப் பிணை வழங்கும் நிபந்தனைகளைத் தளர்த்துவதற்கு அல்லது மாற்றுத் தண்டனை முறைகளை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (ii) சிறைச்சாலைத் திணைக்களத்தில் தற்போதுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு, சேவை வசதிகள் மற்றும் தொழிற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) கைதிகளின் சுகாதார, துப்புரவேற்பாட்டு மற்றும் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) கைதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களை சமூகமயப்படுத்துவதற்கும் அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2483/2026

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய முழுமையான தகவல்கள் அடங்கிய அறிக்கை அமைச்சிற்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பட்டியலின்படி அடையாளங் காணப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி தரவுகளின் துல்லியத்தன்மையைச் சரிபார்க்கப் பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் பணியாற்றிய தகுதிவாய்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திச் செய்துள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க எடுக்கப்பட்டுள்ள துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்கு எக்காலகட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பல ஆண்டுகளாக ஊதியம் பெறாமல் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கு ஏதேனும் இடைக்கால நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) போரினாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட மேற்படி ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமையளித்து, நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2554/2026

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தர்மசங்கரி பொது விளையாட்டு மைதானத்தின் புனரமைப்புப் பணிகள் அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் எஞ்சியுள்ள புனரமைப்புப் பணிகளை நிறைவு செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் அமைச்சினூடாக இன்றளவில் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு, நாவிதன்வெளி மற்றும் கல்முனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்காக 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் விளையாட்டு மைதானங்களை புனரமைப்பதற்கும் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்குமாக அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2599/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் நெனோ டெக்னொலொஜி பிறைவெட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிக்கடமைகள் மற்றும் அதன் விடயப்பரப்பு யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் பெயர், கல்வி மற்றும் தொழிற் தகைமைகள், செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவினை கிராமிய மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பொருட்டு இந்நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இந்நிறுவனத்தை பாடசாலைகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் புத்தாக்குநர்களுடன் மிக நெருக்கமாக செயலாற்றி, நாட்டின் அபிவிருத்தியில் நேரடிப் பங்களிப்பை வழங்கக் கூடியதொரு நிறுவனமாக மாற்றியமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2622/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் புதிய தொழில்நுட்ப வசதிகளை பிரிவெனாக்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) தேவையான தொழில்நுட்ப வசதிகளற்ற வித்தியாயதென பிரிவெனாக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அப்பிரிவெனாக்களுக்கு தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) அனைத்து வித்தியாயதென பிரிவெனாக்களுக்கும் தேவையான தொழில்நுட்ப வசதிகளை எப்போது வழங்க முடியும் என்பதைப் பற்றிய ஒரு திட்டவட்டமான காலப்பகுதியை தெரிவிக்க இயலுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வித்தியாயதென பிரிவெனாக்களுக்குத் தேவையான கணனிகளையும், தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) அப்பிரிவெனாக்களுக்கு இணைய வசதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பிரிவெனாக்களில் நிலவும் பௌதீக வளப் பற்றாக்குறைத் தொடர்பாக அமைச்சினால் கணக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வசதிகளை 2027ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2630/2026

கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் பெருமளவிலான நோயாளிகள் நாளாந்தம் சிகிச்சை பெறுகின்ற கம்புறுபிட்டிய ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர்களின் பற்றாக்குறை காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலை வகைப்படுத்தப்பட்டுள்ள தரம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் தாதியர்களின் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு தரம் மற்றும் பிரிவுகள் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் தற்போது பணியாற்றுகின்ற வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் எத்தனை சதவீதமாகும் என்பதையும்;

(iv) வைத்தியசாலையின் வைத்திய மற்றும் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2659/2026

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி. கிளார்க் நிறுவகத்தின் தொழில்நுட்ப இடையீடானது, இலங்கையின் அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கும் தேசிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளதென்பதையும்;

(ii) உள்நாட்டுக் கமத்தொழில் மற்றும் பிரதான ஏற்றுமதி பயிர்கள் சார்ந்த துறைகளுக்கான தொழில்நுட்பத் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அந்நிறுவனத்துக்கு ஆற்றல் உள்ளதா என்பதையும்;

(iii) தேசிய மட்டத்திலான சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குவதற்கு அந்நிறுவனத்திற்கு ஆற்றல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடொன்றுக்கு விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் நெனோ செயற்கைக்கோள் ஆகியவற்றை விருத்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலோபாய மற்றும் தொழில்நுட்ப நன்மைகள் யாவை என்பதையும்;

(ii) உள்நாட்டுக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துவதற்கும் அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் யாவை என்பதையும்;

(iii) தேசிய மட்டத்திலான சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கும், உள்நாட்டுக் கமத்தொழில் மற்றும் கைத்தொழில் துறைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காக அந்நிறுவனத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2683/2026

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பு பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி பதவிக்காக 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் செலவு செய்யப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) உரிய செலவினத் தலைப்பிற்காக 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் அளவு முறையே ரூ. 290.5 மில்லியன் மற்றும் 7,890.5 மில்லியன் ரூபா என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) 2009 தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரையில் ஆண்டு வாரியாக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டு அளவுகளுடன் ஒப்பிடுகையில், 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் மேலே குறிப்பிட்டுள்ள அளவிலான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் செலவு செய்யப்பட்ட விதம் தொடர்பான முழுமையான தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி செலவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசம்பர் 22, செவ்வாய்க்கிழமை)

2338/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2025.12.31 ஆம் திகதியளவில் —

(i) உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களில், வர்த்தக மேல் நீதிமன்றங்களில், மேல் நீதிமன்றங்களில், மாவட்ட நீதிமன்றங்களில், நீதவான் நீதிமன்றங்களில், சிறுவர் நீதவான் நீதிமன்றங்களில் மற்றும் தொழில் நியாய சபைகளில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டிலும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை, ஆண்டு வாரியாக;

(iii) அவ்வழக்குகளில், 'வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு' உயர் நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டு வாரியாக;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீதவான் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையானது, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நிலுவையிலுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம்;

(ii) மாவட்ட நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கையானது, மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நீதிமன்றங்களிலும் நியாய சபைகளிலும் நிலுவையிலுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2340/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வழக்கு ஒன்றின்போது குழந்தையின் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் சர்ச்சை எழும் சந்தர்ப்பங்களில், அச்சிக்கலைத் தீர்ப்பதற்காக மரபணுப் பரிசோதனைகளைப் (DNA Tests) பயன்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளதென்பதையும்;

(ii) 1999 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பராமரிப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் வழக்கு ஒன்றில் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் சர்ச்சை எழும் சந்தர்ப்பத்தில், மரபணுப் பரிசோதனை ஒன்றுக்காகத் தேவையான மாதிரிகளை வழங்குமாறு உத்தரவிடுவதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென்பதையும்;

(iii) குழந்தையின் தந்தைமை அல்லது தாய்மை தொடர்பில் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றின்போது, மரபணுப் பரிசோதனை ஒன்றுக்காகத் தேவையான மாதிரிகளை வழங்குமாறு தரப்பொன்றிற்கு உத்தரவிடுவதற்குப் போதுமான சட்ட ஏற்பாடுகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அத்தகைய சட்டரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், திருத்தம் செய்வதற்கு அல்லது அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் சட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காலச்சட்டகம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2452/2026

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2020.01.01 ஆம் திகதி முதல் 2026.06.30 ஆம் திகதி வரை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினாலும் அதனுடன் இணைந்த நிறுவனங்களினாலும் வெளிநாட்டுக் கடன் அல்லது அன்பளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் —

(i) கருத்திட்டத்தின் பெயர் மற்றும் கடன் வழங்கும் நிறுவனத்தின் கருத்திட்ட இலக்கம்;

(ii) நிதி வழங்கும் வெளிநாட்டு நிறுவனம் அல்லது அரசு;

(iii) உரிய ஒப்பந்த இலக்கங்கள், கைச்சாத்திடப்பட்ட திகதிகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதிகள்;

(iv) மொத்தச் செலவு, வெளிநாட்டு நிதியின் அளவு மற்றும் அரசாங்க நிதி ஒதுக்கீட்டின் அளவு;

(v) உரிய வட்டி வீதம், சலுகைக் காலம் மற்றும் மீளச் செலுத்தும் காலம்;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2026 ஜூன் 30 ஆம் திகதியன்று ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பாகவும் —

(i) ஒதுக்கப்பட்ட தொகையில் செலவிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதன் சதவீதம்;

(ii) பௌதீக முன்னேற்றம் சதவீதமாக;

(iii) மூலத்திட்டத்தின்படி எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்திற்கும் உண்மையான முன்னேற்றத்திற்கும் இடையிலான வித்தியாசம்;

(iv) ஏற்பட்டுள்ள தாமதம்;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2026 டிசெம்பர் 24, வியாழக்கிழமை

வாய்மூல விடைக்கான வினாக்கள்

38/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் கீழ் உள்ள விளையாட்டுச் சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அச்சங்கங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான தெரிவின்போது ஒவ்வொரு சங்கத்திற்கும் உரித்தான வாக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அந்நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான தெரிவின்போது, விளையாட்டுச் சங்கங்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்குவதன் மூலம் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக செல்வாக்குச் செலுத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறித்து அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான தெரிவு செயன்முறையின் வெளிப்படைத்தன்மையையும் நியாயத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

164/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி தொடர்பில் அர்ஜுன மகேந்திரன் என்பவருக்கெதிராகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக இந்நாட்டின் நீதிமன்றங்களினால் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட திகதிகளும் அவற்றை விடுத்த நீதிமன்றங்களின் பெயர்களும் யாவையென்பதையும்;

(iv) இதுவரை அவரை இந்நாட்டுக்கு அழைத்துவர முடியாமற்போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அவரை இந்நாட்டுக்கு அழைத்து வருவதற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

728/2025

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை விவசாயப் பயிர் ஏற்றுமதி வாயிலாக ஈட்டப்பட்ட வருமானம் யாதென்பதையும்;

(ii) அவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட விவசாயப் பயிர்கள் யாவை என்பதையும்;

(iii) விவசாயப் பயிர் ஏற்றுமதியை மேலும் அதிகரிப்பதற்காக எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

771/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி நடாத்திய தாக்குதலுக்கு இலக்கான இராணுவ முகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தாக்குதல்கள் காரணமாக ஊனமுற்ற மற்றும் மரணமடைந்த இராணுவ உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி தாக்குதல்களின் போது கொள்ளையிடப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) கைப்பற்றப்படாத அல்லது ஒப்படைக்கப்படாத ஆயுதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) அரசாங்கத்தின் பொறுப்பில் எடுக்கப்படாத ஆயுதங்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

993/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், சமூகப் பாதுகாப்புச் சபையுடன் இணைந்து புலம்பெயர் தொழிலாளர்களுக்காக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்திய திகதி யாது என்பதையும்;

(ii) அந்தப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி ஓய்வூதியத் திட்டத்துடன் இணைந்துள்ள இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அந்த ஓய்வூதியத் திட்டத்தை மேலும் பிரபலப்படுத்துவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1670/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கக்கூடிய கைதிகளின் அதிகபட்ச எண்ணிக்கை யாது;

(ii) தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணிக்கை ஆண்கள் மற்றும் பெண்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்காக அரசாங்கத்தினால் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில், விளக்கமறியலில் இருந்த காலப்பகுதியில் உயர்நீதிமன்றங்களுக்கு மேன்முறையீடுகளை முன்வைத்துள்ள கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) 2024 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் மூலம் விளக்கமறியல் காலத்தினை தண்டனை காலத்துடன் கணக்கிடுதல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நிவாரணம் 2024 மே 03ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதால், அத்திகதிக்கு முன்னர் அத்தகைய நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதிபெற்ற கைதிகளின் எண்ணிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2044/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2025 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அம்மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அரசாங்கத்திடம் இந்த மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தி மூலத்திட்டம் (Master Plan) உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அதன் விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம், மட்டக்களப்பு கல்லடி கடற்கரைப் பிரதேசத்தை சர்வதேச சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கான விசேட அபிவிருத்திக் கருத்திட்டமொன்றைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதன் விபரங்கள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/2026

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(ii) இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு குறைந்த விலைக்கு சந்தைக்கு வருவதன் காரணமாக உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை அறிவாரா;

(iii) உருளைக்கிழங்கு செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) உள்நாட்டு உருளைக்கிழங்கு விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தரமான விதை உருளைக்கிழங்குகளை உள்நாட்டில் உற்பத்தி செய்து, அவற்றைக் குறைந்த விலைக்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா;

(ii) உரம், விவசாய இரசாயனங்கள், எரிபொருள், உழைப்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றுக்காக ஒரு ஹெக்டேயர் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் செலவு தொடர்பில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(iii) ஒரு ஹெக்டேயரிலிருந்து பெறப்படும் உருளைக்கிழங்கு விளைச்சலை அதிகரிப்பதற்காக அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2739/2026

கௌரவ சந்தன தென்னகோன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2026ஆம் ஆண்டில் இதுவரையில் காட்டு யானைகளின் தாக்குதல்களால் மரணமடைந்த நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மரணமடைந்த ஒவ்வொரு நபரும் வாழ்ந்துவந்த பிரதேசத்தின் அடிப்படையில் அதன் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவ்வாறு மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவதைத் தடுப்பதற்கான பிரதான பொறுப்பு சாட்டப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனமானது இவ்விடயம் தொடர்பில் இதுவரையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i)இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் காட்டு யானைகளின் தாக்குதல் காரணமாக பதிவாகியுள்ள வீடுகள் மற்றும் சொத்தழிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களுடன் ஒப்பிடுகையில் குறித்த அழிவுகள் அதிகரித்துள்ளனவா அல்லது குறைவடைந்துள்ளனவா என்பதையும்;

(iv) சொத்தழிவுகள் தொடர்பில் நட்டஈடு செலுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட்டுள்ள மொத்த நட்டஈட்டுத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) வீட்டு அலகொன்றுக்காக செலுத்தப்படுகின்ற ஆகக் கூடிய நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) தெங்கு மற்றும் நெல் உள்ளிட்ட பயிர்களின் அழிவுகளுக்காக நட்டஈடு செலுத்தப்படும் முறைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2742/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புறாத் தீவு தேசியப் பூங்கா தொடர்பில் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தீவிற்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் / பதிவு அவசியமானதா என்பதையும்;

(iii) ஆம் எனில், அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள், வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவை வழங்கப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றவர்களில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) திமிங்கிலங்களையும் டொல்ஃபின்களையும் கண்டுகளிப்பதற்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் படகுகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் / பதிவு அவசியமானதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள், மேற்படி மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவை வழங்கப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்;

(iii) புறாத் தீவு மற்றும் கடல்சார் முலையூட்டிகளைக் கண்டுகளிப்பதற்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் அமைவிடங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

(2026, டிசம்பர் 24, வியாழக்கிழமை)

2453/2026

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் வெளியிடப்பட்ட பாடநூல்கள் மற்றும் பாட மொடியூல்களை அச்சிடுவதற்காக வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கருத்திட்டத்தின் பெயர் மற்றும் நிதியளிக்கும் நிறுவனம் அல்லது அரசு யாதென்பதையும்;

(iii) மேற்படி நிதி கடனாக அல்லது அன்பளிப்பாக பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கருத்திட்டக் காலப்பகுதி மற்றும் அச்சிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை யாதென்பதையும்;

(v) 2026.06.30 ஆம் திகதியளவில் அத்தொகையிலிருந்து செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிழைகள் காரணமாக விநியோகத்தை நிறுத்த வேண்டிய அல்லது அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை, தரம், பாடம் மற்றும் மொழிமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பு யாதென்பதையும்;

(iii) மீள அச்சிடப்பட்ட பிரதிகளின் எண்ணிக்கை, அதற்காக செலவிடப்பட்ட நிதித் தொகை மற்றும் அந்நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலம் யாதென்பதையும்;

(iv) இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவுகள் யாவையென்பதையும்;

(v) பொறுப்பான தரப்பினரிடமிருந்து அவ்விழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2498/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 102 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'அரச சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட ஒவ்வொரு பிரஜைக்கும் திட்டவட்டமான டிஜிட்டல் அடையாளக் குறியீட்டினை வழங்குதல்' என்ற முன்மொழிவானது 2026.09.01 ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2500/2026

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 103ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'உள்ளீட்டு வற் (Input VAT) மீதான ஏற்றுமதி அபிவிருத்தி வரியை ஏற்றுமதியாளர்களுக்கு துரிதமாக மீளளிப்புச்செய்ய நடவடிக்கை எடுத்தல்' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 138/2026

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சுரங்க ரத்நாயக்க

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ சட்டத்தரணி ஹபீப் றிபான்

கௌரவ வருண லியனகே

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ இம்ரான் மகரூப்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— 'காவந்திஸ்ஸ' யானையின் இறப்பு, அது தொடர்பான அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்துதல் என்பவற்றை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காகவும், இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,— சமுதாயத்தின் நன்மைக்கென அரசானது சூழலைப் பாதுகாத்தலும் பேணிக்காத்தலும் சீராக்குதலும் வேண்டும் என அரசியலமைப்பின் 27(14) ஆம் உறுப்புரையின் கீழ் அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளாக அரசின் மீது விதிக்கப்பட்டுள்ளதனாலும்;

இயற்கையைப் பாதுகாத்தலும் அதன் செல்வங்களைக் காத்தலும் அரசியலமைப்பின் 28(ஊ) ஆம் உறுப்புரையின் கீழ் இலங்கையிலுள்ள ஒவ்வொரு நபரினதும் கடமையெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதனாலும்;

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பகிரங்க நிதி மீதான முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திற்கு உரியது என்பதோடு, வனசீவராசிகள் பாதுகாப்பு மற்றும் யானை-மனித மோதலை முகாமை செய்வதற்காக பொதுமக்களின் பணத்திலிருந்து ஒதுக்கப்படும் நிதிகள் சரியான முறையிலும் பயனுள்ள முறையிலும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து திருப்தியடைவதற்கான பொறுப்பு பாராளுமன்றத்திற்கு உள்ளதனாலும்;

இலங்கையில் வாழ்ந்த மிக உயரமானதும் மிகப்பெரியதுமான தந்தங்களைக் கொண்ட யானைகளில் முதன்மையான ஒன்றாகக் கருதப்பட்டதும், அனுராதபுரம் மற்றும் குருணாகல் மாவட்டங்களின் கல்கமுவ, உஸ்கல சியம்பலங்கமுவ ஆகிய பகுதிகளைச் சூழவுள்ள பிரதேசங்களில் பல வருடங்களாக உலாவித் திரிந்ததுமான 'காவந்திஸ்ஸ' என்ற யானை, துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டதாகக் கருதப்படும் காயத்திற்காக 2026 செப்டம்பர் 24 ஆம் திகதி முதல் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் 2026 ஒக்டோபர் 16 ஆம் திகதி உயிரிழந்ததனாலும்;

1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தாவர, விலங்கின பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) கீழ் யானையொன்றைச் சுடுதல், காயப்படுத்துதல் அல்லது கொல்லுதல் என்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதோடு, அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் காட்டு யானைகளைப் பாதுகாப்பதற்குமான முதன்மைப் பொறுப்பு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரியது என்பதினாலும்;

'காவந்திஸ்ஸ' யானையின் உடலில் துப்பாக்கிக் காயங்கள் காணப்படுவதாகவும், அந்த யானை உட்பட அப்பகுதியிலுள்ள காட்டு யானைகளின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் 2025 ஆம் ஆண்டிலிருந்தே சூழலியலாளர்களாலும் ஊடகங்களாலும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்ததனாலும்;

இந்த இறப்பு சம்பந்தமாக சரியான, வெளிப்படையான மற்றும் பக்கசார்பற்ற விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்பதில் பொதுமக்களின் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளதனாலும்;

இலங்கையில் எஞ்சியுள்ள தந்தங்களைக் கொண்ட யானைகளின் பாதுகாப்பு மற்றும் வனசீவராசிகள் முகாமை முறைமையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கைக்கு இச்சம்பவம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதனாலும்;

மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மாத்திரம் வரையறைக்குட்படுத்தாது பின்வரும் விடயங்களும் உள்ளடங்கும் வகையில், அரசியலமைப்பின் 74 ஆம் உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்டுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் 100 ஆம் நிலையியல் கட்டளையின் பிரகாரம், 'காவந்திஸ்ஸ' யானையின் இறப்பு, அது தொடர்பான அதிகாரிகளின் செயற்பாடுகள் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்துதல் என்பவற்றை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காகவும், இவ்வாறானதொரு சம்பவம் மீண்டும் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது:

(அ) 'காவந்திஸ்ஸ' யானையின் இறப்பு சம்பவித்த விதம், அதற்குப் பங்களித்த உடனடி மற்றும் நீண்டகாலக் காரணங்கள், மரணப் பரிசோதனை அறிக்கையின் கண்டுபிடிப்புகள் மற்றும் சுகாதார, சூழலியல் முறைமை சார்ந்த காரணிகள்;

(ஆ) அந்த யானை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட அல்லது காயங்கள் ஏற்படுத்தப்பட்ட விதம், அதற்கு சட்டவிரோத துப்பாக்கிகள் அல்லது பொறித் துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது, மற்றும் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகளின் நிலைமை;

(இ) 2025 ஆம் ஆண்டில் விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளிலிருந்து இறப்பு வரையிலான காலப்பகுதியில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், கால்நடை வைத்திய அதிகாரிகள், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, இலங்கை பொலிஸ் மற்றும் அப்பகுதியிலுள்ள ஏனைய அதிகாரிகளால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படாத நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் போதுமான தன்மை;

(ஈ) வழங்கப்பட்ட சிகிச்சைகளின் போதுமான தன்மை, சிகிச்சையளிக்கும் முறைமை மற்றும் ஊனமுற்ற காட்டு யானைகளுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு பொறிமுறைகளின் தயார்நிலை;

(உ) தாவர, விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டம் மற்றும் 1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுடுபடைக்கலன்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தவறுகளும் விசாரணைகளின் தாமதங்களும்;

(ஊ) காட்டு யானைகள் பாதுகாப்பு மற்றும் யானை-மனித மோதலை முகாமை செய்வதற்காக ஒதுக்கப்படும் நிதிகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் வினைத்திறன் மற்றும் பயனுறுதி;

(எ) சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் காட்டு யானைகளின் வாழிடங்கள் மற்றும் நடமாட்டப் பாதைகள் (யானை வழித்தடங்கள்) இழக்கப்படலும் அதற்கு வழிவகுத்த காணி பயன்பாட்டுத் தீர்மானங்களும்; மற்றும்

(ஏ) இலங்கையில் எஞ்சியுள்ள தந்த யானைகள் உட்பட்ட காட்டு யானைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட மறுசீரமைப்புகள், நிர்வாக நடவடிக்கைகளைப் பலப்படுத்துதல், தந்த யானைகளைப் பாதுகாப்பதற்கான விசேட வேலைத்திட்டம் மற்றும் அவசர சிகிச்சை மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகள் தொடர்பான பரிந்துரைகள்.

02. (அ) பாராளுமன்ற நிலையியற் சட்டளை 103 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், சபாநாயகரால் அரசாங்கக் கட்சியையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் இணைத் தலைமையைக் கொண்ட இரு (02) தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இணைத் தவிசாளர்களில் எவரேனும் ஒருவர் சமுகமளிக்காத சந்தர்ப்பங்களில், வருகை தந்திருக்கும் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினரொருவர் அச்சபையின் இணைத் தலைமை வகித்தல் வேண்டும்; மற்றும்

(இ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களை குழு கொண்டிருத்தல் வேண்டும்.

03. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 108 இன் பிரகாரமும் 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், எந்தவொரு நபரையும் அழைப்பதற்கும், சாட்சியங்களைப் பெறுவதற்கும் மற்றும் மரணப் பரிசோதனை அறிக்கைகள், கால்நடை மருத்துவ அறிக்கைகள், களக் குறிப்புகள் உள்ளிட்ட எந்தவொரு ஆவணத்தையும் அல்லது அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு பணிப்பதற்கும்;

(இ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 108 இன் பிரகாரம், தங்களது கருத்துக்களையும் அவதானிப்புகளையும், குழுவின் முன்னிலையில் பெறப்பட்ட சாட்சியக் குறிப்புகளுடன் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும் மற்றும் பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டுமெனக் கருதப்படும் எந்தவொரு விடயம் தொடர்பிலும் விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(உ) குழுவின் உதவிக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் வனசீவராசிகள் விஞ்ஞான, கால்நடை மருத்துவம், சுற்றுச்சூழல் சட்டம், தடயவியல் மருத்துவம் மற்றும் வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் தொடர்பான விஞ்ஞான ரீதியான பரிசோதனை (Ballistics Examination) போன்ற சம்பந்தப்பட்ட துறைகளில் விசேட அறிவும் அனுபவமும் கொண்ட நபர்கள், நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஊ) விசாரணைக்குரிய இடங்களைப் பார்வையிடுவதற்கும் மற்றும் இடத்திற்கு இடம் சென்று கூட்டங்களை நடத்துவதற்கும்; மற்றும்

(எ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 109 இன் பிரகாரம், பாராளுமன்றத்தின் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் அல்லது கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் தங்களது விசாரணைகளையும் கூட்டங்களையும் தொடர்ந்து நடத்துவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.